வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான ஒன்றேகால் ஏக்கர் நிலம் அங்கேயே இருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அலங்காநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டுக்கு பெயர்பெற்ற ஊராக அலங்காநல்லூர் இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜல்லிக்கட்டினை, அங்கேயே வந்து தொடங்கி வைத்து ஒரு சாதனையைப் படைத்திருக்கின்றார்கள் என்பதையும் முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அலங்காநல்லூருக்கு கால்நடை மருத்துவமனை அமைப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

ஆரம்ப சுகாதார நிலையம்

***14605—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதி, சீனாபுரம் பகுதியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2019 பிப்ரவரி 14]

பெருந்துறை தொகுதி, பெருந்துறை ஒன்றியத்தில் இருக்கக்கூடிய மக்கள்தொகைக்கேற்ப, ஏற்கெனவே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: என்னை அரசியலில் வாழ வைத்த தெய்வம், வங்கக் கடலோரம் தூங்கா துயில்கொண்டிருக்கிற தங்கமனத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், பூக்களுக்கெல்லாம் புன்னகையைக் கற்றுக் கொடுத்த புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், எனது பெருந்துறை தொகுதியில், AIIMS மருத்துவமனை அமைய வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் நான் வைத்திருந்தேன். அந்த மருத்துவமனை அங்கே அமையாவிட்டாலும்கூட, அதற்கு இணையாக, போக்குவரத்துத் துறையின் மூலமாகச் செயல்படக்கூடிய போக்குவரத்து மருத்துவக் கல்லூரியை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரமுயர்த்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-40

கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு பல்வேறு இடங்களில் இருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தாலும், அந்தத் தட்டுப்பாடுகளைப் போக்குகிற அரசாக இவ்வரசு உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே எனது பெருந்துறை தொகுதிக்குத் தனியாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்ததற்கு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் எனக்கு அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். அம்மா அறிவித்த

இத்திட்டத்திற்கு 240 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, பெருந்துறை தொகுதி மக்களுடைய குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர், அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய 3 மாவட்ட மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையான, அவினாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையிலே மத்திய அரசாங்கத்தினுடைய நிதி இருந்தாலும், இல்லாவிட்டாலும், மாநில அரசே முழுமையாக இந்த நிதியை ஏற்று, அவினாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றித் தருவோம் என்று அதற்கு 1,564 கோடி ரூபாய் நிதியொதுக்கீடும் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே சீனாபுரம் பகுதியிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்கிற கோரிக்கையை நான் வைத்திருந்தேன். மருத்துவத் துறையைப் பொறுத்தவரையிலே, பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வரக்கூடிய அரசாக அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மூலக் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு இரண்டு துணைக் கேள்விகள் உள்ளன.

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: ஆமாம், நான் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்விக்கே இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டீர்களென்றால் மற்ற உறுப்பினர்களுக்கு நான் எப்படி வாய்ப்புத் தர முடியும்?

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திட்டங்களுக்கு நன்றிதான் சொன்னேன். இந்தக் கேள்வி 3 ஆண்டுகளுக்கு முன்பாக என்னால் கொடுக்கப்பட்ட

2019 பிப்ரவரி 14]

கேள்வி. இப்போது அந்தக் கேள்வியை சட்டப் பேரவையிலே கேட்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மருத்துவமனையை அமைப்பதற்குண்டான அனைத்து விதிமுறைகளும் அந்தப் பகுதியிலே பூர்த்தியாகிற சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே எண்ணற்ற மக்கள், குறிப்பாக, விசைத்தறி சார்ந்த மக்கள் வாழ்கிற காரணத்தினாலே, அந்தப் பகுதிக்கு அந்த மருத்துவமனையை உடனடியாக அமைத்துத் தரவேண்டுமென்கிற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் அன்போடு வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கனிவோடு பரிசீலிக்கப்படும்' என்று சொன்ன மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நான் சுகாதாரத் துறைக்கு கூடுதலாக ஒரு கோரிக்கையை வைக்க ஆசைப்படுகிறேன். இப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலே வருவாய்த் துறையிலே, 'மக்களைத் தேடி வருவாய்த் துறை' என்கிற திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதைப்போல, சுகாதாரத் துறையிலும் ஏழையெளிய மக்களை மருத்துவர்கள் தேடி சந்தித்து, அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கக்கூடிய ஒரு mobile மருத்துவ வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு ஓர் ஆலோசனையாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.*

அதுமட்டுமல்ல, தற்போது கிராமப்புறங்களிலே, மருத்துவமனைகளிலே இறக்கக்கூடியவர்களுக்கு உடனடியாக

[2019 பிப்ரவரி 14

இறப்புச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆனால், வீட்டிலே இயற்கையான முறையிலே, மாரடைப்பு மூலமாக இறந்தவர்களுடைய உடலை எடுத்துக்கொண்டு இடுகாட்டுக்குச் செல்கிறபோது, இறப்புச் சான்றிதழைக் கேட்கிறார்கள். ஆனால், அந்த இறப்புச் சான்றிதழைப் பெறுவதற்கு பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்றன. ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். கிராமப்புறங்களிலே, வீடுகளிலே, மாரடைப்பால் இயற்கையான முறையிலே மரணமடைபவர்களுடைய உடலை Crematorium-லே தகனம் செய்வதற்கு அவர்கள் இறப்புச் சான்றிதழ் கேட்கிறார்கள். ஆனால், அந்த இறப்புச் சான்றிதழைப் பெறுவதிலே பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்றன. ஆகவே, கிராமப்புறங்களிலே இறப்பவர்களுக்கு உடனடியாக அரசு மருத்துவர்கள் மூலமாக அந்த இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், அண்ணன் அவர்கள் சொன்னதுபோல, இந்தியாவிலே ஒரு முதன்மைத் துறையாக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை விளங்கி வருகிறது. 2, 3 கருத்துகளை அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது, போக்குவரத்துக் கழகத்தினுடைய சார்பில் இருந்த பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி ஏற்கெனவே நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய உதவியோடு 1992-லிருந்து அரசு மருத்துவக் கல்லூரியாக இயங்குகிறது. 60 M.B.B.S. இடங்களாக இருந்ததை 1992 ஆம் ஆண்டிலிருந்து 100 M.B.B.S. இடங்களாக அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மாற்றிக் கொடுத்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு CEmONC Centre-க்கு 12 கோடி ரூபாய் நிதியொதுக்கியிருக்கின்றோம். உங்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

2019 பிப்ரவரி 14]

முற்பகல் 10-45

இன்னும் இரண்டு விஷயங்கள். நடமாடும் மருத்துவக் குழுக்கள் பற்றி அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 'Hospital on wheels' என்று சொல்லக்கூடிய நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்கெனவே இருக்கின்றன. 416 நடமாடும் மருத்துவக் குழுக்கள், 385 ஒன்றியங்களிலும் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றன. 2018-2019 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 15 இலட்சத்து 77 ஆயிரத்து 45 பேர் நடமாடும் மருத்துவக் குழுக்களை பயன்படுத்தியிருக்கிறார்கள். அதாவது, மக்களைத் தேடி மருத்துவ முகாம் என்ற அடிப்படையிலே, நடமாடும் மருத்துவக் குழுக்கள், கிராமப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத இடங்களுக்குச் சென்று, மரத்தடியிலே அந்த வண்டியை park செய்து, அங்கிருக்கக்கூடிய ஊராட்சித் தலைவர்மூலம் நோயாளிகளையெல்லாம் வரவழைத்து, அந்த இடத்திலே சிகிச்சை அளிக்கக்கூடிய உயர்தர மருத்துவ சிகிச்சை இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கிறது. அது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதோடு சேர்த்து நடமாடும் மருத்துவக் குழுக்கள் பள்ளிகளுக்காகவும், RBSK என்று சொல்லக்கூடிய பள்ளி சிறார்களுக்காகவும் இருக்கிறது.

Death Certificate குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார். அது முக்கியமான பிரச்சினை. இந்தியாவில் first time, birth certificate-ஐ online-ல் பதிவிறக்கம் செய்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இது மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இனிமேல் பிறப்புச் சான்றிதழ் பெற எங்கேயும் போய் காத்திருக்கக்கூடிய நிலை இல்லாதவாறு உருவாக்கியிருக்கிறோம். Death Certificate-ஐ பொறுத்தவரையில் Medico Legal Cases-ல் மட்டும் சில enquiry முடிந்து, அந்த certificate கொடுக்க வேண்டுமென்கின்ற நிலையும், postmortem cases-ல் அதற்குண்டான விசாரணையை முடித்துக் கொடுக்க வேண்டுமென்கின்ற நிலையும் இருக்கிறது. துறை அதை மேலும் ஆய்வு செய்து, உறுப்பினர்களுடைய கருத்துகளைக் கேட்டு, எவ்வளவு விரைவுபடுத்த முடியுமோ, அவ்வளவு விரைவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2019 பிப்ரவரி 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள். (குறுக்கீடு)

திரு. கே.என். நேரு: ஏன்? அதில் என்ன பொறாமை உங்களுக்கு?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைக் கேள்வி கேட்கத்தான் அழைத்தேன்.

திரு. கே.என். நேரு: பாருங்கள், தினமும் எனக்கு வாய்ப்பு கொடுக்கிறீர்கள் என்று இவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களைக் கேள்வி கேட்க allow செய்திருக்கிறேன். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் ஊருக்கு அருகிலே, 30 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறார். அவர் 7, 8 ஆண்டு காலமாக இந்தத் துறையை கவனித்து வருகிறார். நானும் ஐந்து முறை அவரிடம் கேட்டுவிட்டேன். ஒரு பகுதிநேர ஆரம்ப சுகாதார நிலையத்தை, முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு என்ன தகுதி வேண்டுமென்பது தெரியவில்லை. ஆனால், நாங்கள் ஆட்சியில் இருந்தபோது மாண்புமிகு சகோதரர் எம்.ஆர்.கே. அவர்கள் அதற்காக உத்தரவிட்டார்கள். லால்குடி தொகுதியிலே, கானக்கிளியநல்லூர் கிராமத்திலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கு உத்தரவிட்டார்கள். ஆனால், 8 ஆண்டு காலமாக அது நிலுவையில் இருக்கிறது. முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித் தரப்படுமா என்பதை கடந்த ஆண்டும் கேட்டேன், அதற்கு முன்பும் கேட்டேன். இதுவரை அது முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்கப்படவில்லை. கிராமமாக இருக்கின்ற காரணத்தினால் நாளொன்றுக்கு சராசரியாக 200-க்கும் மேற்பட்ட நோயாளிகள் அங்கு வந்து சென்று கொண்டிருக்கின்றார்கள். சிறந்த மருத்துவமனையாக அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அதனை முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

2019 பிப்ரவரி 14]

அதேநேரத்தில், இப்போது பேசிய முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள், கிராமங்களில் இறப்புச் சான்றிதழ் வழங்குவதைப் பற்றிக் கேட்டார்கள். எங்கள் திருச்சி நகரத்தைப் பொறுத்தளவு, ஒருவர் இறந்துவிட்டார் என்று சொன்னால், மருத்துவமனையிலிருந்து சான்றிதழை பெற்றுக் கொண்டு மாநகராட்சியிடம் சென்றால் உடனடியாக இறப்பு சான்றிதழ் வழங்கிய நிலை மாறி, இப்போது அந்தச் சான்றிதழை பெறுவதற்கு RDO ஒப்புதல் வேண்டுமென்று சொல்லி, RDO-விடம் சென்று வருவதற்கு கிட்டத்தட்ட 10 நாட்கள் ஆகிவிடுகின்றன. எனவே, அந்த இறப்புச் சான்றிதழ் பழைய முறையிலேயே வழங்கப்படுமா என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மையமான பகுதி. இஸ்லாமியர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியிலே ஒரு புதிய மருத்துவமனையைத் தொடங்க வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன். அருகில் 30, 40 கிலோ மீட்டரில் இருப்பவரே இதைச் செய்து தரவில்லையென்று சொன்னால், இன்னும் தள்ளிப் போனால் யார் செய்து தருவார்கள் என்பது தெரியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியாக இப்போது பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் கானக்கிளியநல்லூர் பற்றி ஏற்கெனவே இரண்டு முறை பேசினார்கள். முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் அந்த உத்தரவைப் போட்டார்கள் என்று அண்ணன் அவர்கள் சொன்னார்கள். அந்த உத்தரவை நானும் ஏழு ஆண்டுகளாகத் தேடிப் பார்த்தேன். இதுவரை கிடைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி கிடைக்காத உத்தரவைத்தான் முன்னாள் அமைச்சர் அவர்கள் போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முழுநேர ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவதற்கான விதிமுறைகள் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். ஒரே ஒரு விதிமுறைதான். அதாவது, ஓர் ஊராட்சி

[2019 பிப்ரவரி 14

ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும்தான் தரம் உயர்த்தப்படும் என்பதுதான் விதிமுறை. ஏற்கெனவே தாங்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த ஊராட்சி ஒன்றியத்தில் வேறு ஒரு 24 x 7 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகின்ற காரணத்தினால், வருங்காலத்தில் நிச்சயமாக நோயாளிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப அதனை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் அமைச்சர் அவர்களுடைய உத்தரவு எதுவும் இல்லை. நீங்கள் சொன்னதற்குப் பின்னாலே அதை முழுமையாக ஆய்வு செய்தோம். அப்படி எந்த உத்தரவும் இல்லை. வருங்காலத்தில் நோயாளிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப அதைக் கண்டிப்பாக அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும். ஏனென்றால், தற்போது 385 ஒன்றியங்களிலும், 385 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரமுயர்த்தப்பட்டுவிட்டன. இதற்கடுத்து, எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக நோயாளிகள் வருகின்றார்களோ அதை அரசு கருத்திற்கொள்ளும். அந்த அடிப்படையில் தாங்கள் குறிப்பிடுகின்ற அந்த மருத்துவமனைக்கு அவசியம் முன்னுரிமை கொடுக்கப்படும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

Birth Certificate-ஐ பொறுத்தவரை ஏற்கெனவே இருக்கக்கூடிய procedure-ஐ நாம் இன்னும் simplify செய்திருக்கிறோம். அதைத்தான் நான் சொன்னேன். அதாவது, birth certificate-ஐ online மூலம் பெற வசதி செய்திருக்கிறோம். Death certificate-ஐ பொறுத்தவரையில் RDO மூலம் பெறவேண்டும் என்பது Medico Legal Cases-க்கு மட்டும்தான். உதாரணத்திற்கு ஒரு இளம் பெண் மரணம் அடைகின்றபோது அது Medico Legal Case என்பதால் RDO enquiry வரும். அதுபோன்ற நிகழ்வுகளின்போதுதான் அந்த இறப்புச் சான்றிதழ் பெறுவதில் தாமதமாகுமே தவிர, routine ஆக நடைபெறும் மற்ற இறப்புகளின்போது, இறப்புச் சான்றிதழ் பெறுவதில் எந்தவிதத் தாமதமும் இல்லை. இருப்பினும், அரசு அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சியைப் பொறுத்தவரையில், இதுவரை இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள்தான் 100 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே, மூன்று Multi Speciality Hospitals-ஐ அன்றைய மாண்புமிகு பாரதப்

2019 பிப்ரவரி 14]

பிரதமர், மத்திய அரசின் உதவியோடு மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்தார்கள். திருச்சிக்கு மட்டும்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் மாநில நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் கொடுத்து, அந்த Multi Super Speciality Hospital *மாநில அரசு நிதியோடு இன்றைக்கு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது,* CT Scan, MRI Scan, Cath Lab *ஆகியவற்றையும் திறந்து வைத்திருக்கிறோம். இப்போது* Linear Accelerator *வைக்கப் போகிறோம். ஆகவே, திருச்சியில் நீங்கள் சொல்லக்கூடிய அந்த மாநகராட்சிப் பகுதியில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்தான் உங்களுடைய கோரிக்கையை கனிவோடு பரிசீலிக்க வேண்டும். பக்கத்து மாவட்டம் என்ற அடிப்படையில், நானும் உங்களுக்காகப் பரிந்துரை செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவரை வணங்குகிறேன். என்னுடைய திருவெறும்பூர் தொகுதியில் இருக்கக்கூடிய கூத்தாப்பூர் பகுதிக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும். எங்களுடைய மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் திரு. நேரு அவர்கள்கூட சொன்னார்கள். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பலமுறை சொல்லியிருக்கிறேன்.* Health Secretary-*க்கு கடிதமும் கொடுத்திருக்கிறோம். கூத்தாப்பூரைச் சார்ந்திருக்கின்ற மக்கள் பயன்பெறுவதற்காக மட்டும் நான் கேட்கவில்லை. பக்கத்தில் இருக்கக்கூடிய கிளியனூர் ஊராட்சி, பத்தாலப்பட்டி ஊராட்சி, நடராஜபுரம் என்று அதைச் சுற்றியிருக்கின்ற கிராம மக்களெல்லாம் பயன்பெறும் வகையிலேதான் இந்த* Primary Health Centre *வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். ஏனென்றால், இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில், எல்லாருமே துவாக்குடி நகராட்சியில் இருக்கின்ற* G.H.-*க்குத்தான் போக வேண்டியிருக்கின்றது. அந்த மருத்துவமனை 12 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அதுமட்டுமல்ல, திருவேடுமங்கலம் என்ற ஊராட்சியில் பார்த்தீர்களென்றால், ஒரு* health centre *இருக்கிறது. ஆனால், அங்கே 24 மணி நேரமும் மருத்துவ வசதி இல்லையென்ற ஒரு குறையும் இருக்கிறது. இப்போது நாங்கள் ஊராட்சி சபைக் கூட்டம் நடத்துவதால் இதுபோன்ற பிரச்சினைகள் தெரிய*

வருகின்றன. மருத்துவர்களையும் நல்லமுறையில் நியமிக்க வேண்டுமென்றும், இந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூத்தாப்பூரில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்க, உரிய கருத்துருக்கள் பெற்று, அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. வருகின்ற நிதியாண்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழங்கப்படுகின்றபோது, அதிலே நிச்சயமாக கூத்தாப்பூர் இடம்பெறும். ஏனென்றால், ஏற்கெனவே உரிய கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பதைக்காட்டிலும் இருக்கக்கூடிய Sub-Centres வலுப்படுத்தப்படுகின்றன. கிராம சபைக் கூட்டத்தினால் தங்களுக்கு சில விஷயங்கள் தெரியும். அதே கிராம சபைக் கூட்டத்திற்கு நீங்கள் போகும்போது, இன்னொரு விஷயமும் தெரியவரும். அது என்னவென்றால், இந்தியாவிலேயே கிராமங்களிலும், குக்கிராமங்களிலும் சுகாதாரம், Rural health effective-ஆக, வலுவாக இருக்கக்கூடிய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. குக்கிராமங்களில், இன்றைக்கு double VHN system நடைமுறையில் இருக்கிறது. அதாவது, இரண்டு செவிலியர்கள் என்ற திட்டத்தை, இந்தியாவிலேயே முதன்முறையாக நாம் 8,706 Sub-centres-ல் ஆரம்பித்திருக்கிறோம். 8,706 Sub-centres-லும் double VHN system-த்தை நாம் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் அமைக்கப்படும். ஏற்கெனவே, இருக்கக்கூடிய Sub-centres-ம் வலுப்படுத்தப்படும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த அறிவிப்பிலே நிச்சயமாக கூத்தாப்பூர், அரசினுடைய மிக கனிவான பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.